அவர்கள்மூலம் அந்த ஆலையை இயங்க வைத்து, அந்த ஆலையை எக்காரணத்தைக் கொண்டும் அங்கே கொண்டு போகாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலை ஏதோ நட்டத்திலே இயங்குகிற காரணத்தால் அதை அரசு மாற்றுவதற்கு உறுதி கொடுக்கவில்லை. அந்த ஆலையைச் சுற்றியுள்ள நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் கரும்பு பயிர் வளர்க்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதிகளில் உப்பு நிலங்களாக இருப்பதால் அந்தப் பகுதியில் மேலும் கரும்பு பயிரிடும் பகுதியை அதிகரிக்க இயலாது என்ற காரணத்தால் இந்த ஆலையானது நன்னிலம் பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

95—

உடல் ஊனமுற்றோருக்கு இலவசப் பயணச் சலுகை

***20278**—திரு. *மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் உடல் ஊனமுற்றோர்களுக்கு பயணம் செய்ய இலவசப் பயணச் சலுகைகள் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கம் அண்மையில் அத்தகைய வேண்டுகோள்களை அரசிடம் வைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): பல்வேறு பிரிவுகளில் சலுகைகள் வழங்கப்படுவதால், கேள்விக்கு இடம் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி வந்து ஊனம் உற்றவர்களுக்கு போக்குவரத்துக் கழகத்தில்தான் சலுகை கேட்டிருக்கிறேன். ஆனால் உங்களுடைய ஆணை 10-11-1994,

24-11-1994 என்ற இந்த இரண்டு ஆணைகளிலும் பல்வேறு கண்டிஷன்கள் போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொன்னால் கடுமையான ஹேண்டிகேப்பாக இருக்க வேண்டும். பத்தாயிரம் அல்லது 12 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இன்கம் இருக்கக்கூடாது. அதேபோல 30 கிலோ மீட்டருக்கு மேல் போகக் கூடாது என்று பல தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசிலே இருக்கிற ரயில்வேயிலே பார்த்தால் இந்த தடை கிடையாது. ஊனம் உற்ற ஒருவர் பயணம் செய்யும்போது துணைக்காக ஒருவரை அழைத்துக் கொண்டு சென்றால் அவர்களுக்கும் இந்த கன்செஷன் இருக்கிறது. ஏர்லைன்ஸ், ஏர் இந்தியாவிலே கூட அறிவிக்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்டிருக்கிறது, ஊனம் உற்றோருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று. ஆனால் நம்முடைய சர்க்காரிலே பல்வேறு கண்டிஷன்கள் போடுவதால் ஈவன் எம்பிளாயீஸ் கூட போக முடியாது. ஒரு பியூன் கூட அந்த கன்செஷனில் போக முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த கண்டிஷன்கள் இல்லாமல், மத்திய அரசு செய்தது போல எல்லா இடங்களுக்கும், எத்தகைய பஸ்ஸிலும் போகலாம், ஆனால் குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்திலே போகக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அதிலேயும் போகலாம் என்ற வகையில் ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனம் உற்றவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் எல்லாம் ரயிலிலே பிரயாணம் செய்வது குறைவு. ஆனால் பஸ்ஸிலே பிரயாணம் செய்வது மிக அதிகமான ஒன்றாகும். அவர்கள் தினந்தோறும் பஸ்ஸிலே பிரயாணம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதிலே கண்பார்வை அற்றோர்களுக்கும், மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும் வயது வரம்பின்றி பஸ் பாஸ், இலவச பயணச் சலுகை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதேபோல 15 வயது வரையில்தான் உடல் ஊனம் உற்றோர்களுக்கு பஸ் பாஸ் என்று இருந்தது கடந்த ஆட்சி காலத்தில். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 15 வயதை 20 வயது என்று ஆக்கினார்கள். காது கேளாத பிள்ளைகள் பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகளுக்கு அவர்களுடைய இல்லத்திலிருந்து சென்று திரும்பி வருவதற்கு அனைத்து அரசு பேருந்துகளிலும் இலவச பயணச் சலுகையை அரசு அளித்துக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர 20 வயது மேற்பட்டவர்களுக்கு 50 சதவீத கட்டணத்தை சலுகைகளாக அவர்களுடைய இருப்பிடத்திலிருந்து கல்லூரி, மருத்துவமனை, பயிற்சிக் கூடம், பணி இடம் போன்ற இடங்களுக்கு பயணம் செய்கிற தூரம் மிக அதிகப்படாமல்

கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாதத்திற்கு 46 தடவைகள் அவர்கள் பயணம் செய்யலாம் என்று நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் இந்த பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை என்று பார்த்தால் எங்களிடத்திலே விண்ணப்பித்த அனைவருக்கும் கொடுத்திருக்கிறோம்; யாரையும் விட்டுவிடவில்லை. அனைவருக்கும் இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக யாரும் விண்ணப்பிக்கவில்லை. 1988-89-ல் 409 பேர்கள் அந்தப் பயணச் சலுகையை பெற்றார்கள். ஆனால் 1993-94-ல் 5,128 பேர் அந்தப் பயணச் சலுகையைப் பெற்றிருக்கிறாகள்.

முற்பகல் 11-05

ஆகவே, கூடுதலாக யாருக்கும் கொடுக்க முடியாமல் அரசிலே இல்லை. எல்லோருக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதிலே விதிமுறைகளைப் பற்றிச் சொன்னார்கள். விதிமுறைகளை நாங்கள் கடுமையாக்கி இருக்கிறோம் என்று சொன்னார்கள். விதிமுறைகளை கடுமையாக்கவில்லை. அவர்கள் சிறந்த முறையிலே—மிகவும் ஊனமுற்றவர்கள் பயன்பெற வேண்டும் என்கின்ற அடிப்படையில் முழுவதுமாக காது கேளாதோர், இரண்டு கால்களுமே செயல் இழந்த நிலையில் முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலையிலே இருப்பவர்கள் அவர்களுக்கு பஸ்ஸிலே போவதற்கே முடியாத நிலைமை இருக்கிறது—அப்படிப்பட்டவர்களுக்கு இலவச பஸ் பாஸ்; ஒன்றோ அல்லது இரண்டு கால்களிலும் முழங்கால் அளவுக்கு துண்டிக்கப்பட்டவர்கள், இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்டு கைகளிலோ அல்லது கால்களிலோ 75% செயலற்றவர்களாக இருக்கவேண்டும். இரண்டு கைகளுமே முழுவதுமாக துண்டிக்கப்பட்டவர்கள் கடுமையான வலிப்பு நோய் மற்றும் தசை முடக்கு வாதம், கடுமையான மன வளர்ச்சி குன்றிய உதவியாளர் துணையின்றி வெளியே செல்லவே இயலாதவர்கள் அதே போல மோட்டார் நியூரோ டிஸீஸஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், நியூரோ மஸ்குலர் ப்ராப்ளத்தினாலே பாதிக்கப்பட்டவர்கள், இப்படிப்பட்டவர்களுக்கு முழுமையான இலவச பஸ் பாஸை வழங்குகிறோம்; அதற்குத்தான் கண்டிஷன்களை வைத்திருக்கிறோம். 12,000 ரூபாய் வருமானம் என்பது எல்லாவற்றிற்கும் பொருத்தமான ஒன்றாகும். சமூக நலத்துறையிலே எல்லா உதவிகளையும் பெறுவதற்கு அந்த வருமான வரம்பை வைத்திருக்கிறோம். நீங்கள் சொன்ன கோரிக்கைகள் பரிசீலிக்கப்படலாம் எதிர்காலத்திலே.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய கண்டிஷன்ஸ் வைத்ததினால் அதிகமான மக்கள் பயன் அடைய முடியவில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. ஆகையினால் இந்த கண்டிஷன்ஸ் இல்லாமல் மத்திய அரசு போலவே நீங்கள் சொல்கின்ற அளவில் உள்ளவர்களுக்கு நடக்கவே முடியாது. 50% ஹேண்டிகேப்டாக உள்ளவர்கள்தான் பஸ்ஸிலே ஏற முடியும், டிரெயினிலே ஏறமுடியும்.

இல்லையென்றால் வீட்டிலேதான் படுத்திருக்க வேண்டும். காது கேளாதவன், கண் இல்லாதவன், வாய் பேச முடியாதவன், 75% ஊனமுற்றவர்களாக இருந்தால் பஸ்ஸிலே போக முடியாது. நீங்கள் இதை 50% ஹேண்டிகேப்டாக இருப்பவர்களுக்கு சலுகை கொடுத்தால்தான் சரியாக இருக்குமே தவிர, இது 75%-க்கு மேலே ஹேண்டிகேப்டாக இருப்பவர்களுக்கு வருகிறது. நீங்கள் சொல்கின்ற ஆணைப்படி 75%, 80% ஹேண்டிகேப்டாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அவர்களுக்கு பஸ்ஸிலே போக முடியாது. They cannot move from one place to another. ஆகையினால் தயவுசெய்து 50% ஹேண்டிகேப்டாக இருப்பவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சோஷியல் வெல்பர் போர்டிலே சேர்மனை ஹேண்டிகேப்டாக இல்லாதவர்களாக போட்டுவிட்டு வைஸ் சேர்மனை ஹேண்டிகேப்டாக போட்டால் அவர்களுக்குத் தெரியும் கஷ்டங்கள் என்னவென்று. நமக்குத் தெரிவதைவிட ஹேண்டிகேப்டாக இருப்பவர்களுக்குத் தெரியும். ஆகையினால் ஒரு வைஸ் சேர்மனையாவது சோஷியல் வெல்பேர் போர்டிலே போடும்போது ஹேண்டிகேப்டாக போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, இதை அமல்படுத்துவது சோஷியல் வெல்பேர் போர்டு அல்ல. சோஷியல் வெல்பேர் போர்டு மத்திய அரசினுடைய அனுமதியோடுதான் அதற்கு தலைவர் நியமிக்கப்படுகிறார்கள். இதை இம்ளிமெண்ட் செய்யக் கூடியது சோஷியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட். உடல் ஊனமுற்றோர் துறைக்கு என்று தனியான ஒரு துறையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றவுடன் அறிவித்துக் கொடுத்தார்கள். இதுவரை நம்முடைய தமிழ்நாட்டிலேதான் இதற்குத் தனி துறை இருக்கிறது. நம்மை பார்த்துத்தான் இப்போது மற்ற மாநிலங்களிலே செய்து இருக்கிறார்கள். இந்த உடல் ஊனமுற்றோர் துறைக்கு என்று தனியான இயக்ககம் இருக்கிறது. அதிலே இயக்குநர் இருக்கிறார். நீங்கள் சொன்னதைப் போல, கடும் ஊனமுற்றவர்கள் பஸ்ஸிலேயே போக முடியாத சூழ்நிலை ஏற்படும் என்று சொன்னீர்கள். இந்த ஆண்டு மட்டும் 916 பேர்கள் இப்படிப்பட்டவர்கள் பஸ்ஸிலே பிரயாணம் செய்து இருக்கிறார்கள் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். இப்போது நீங்கள் சொல்லியிருக்கின்ற சில கோரிக்கைகளை நிச்சயமாக உடல் ஊனமுற்றோர் நலன் மீது அக்கறை இருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள்.